**நவம்பர் – 20**

# TNPSC துளிகள்

- 4000 டி20 ரன்களைக் கடந்த முதல் மட்டைப் பந்தாளர் என்ற பெருமையினை விராட் கோலி அவர்கள் பெற்றார்.
    - இந்திய அணியில் மிகக் குறுகிய காலத்தில் 3000 ரன்களை கடந்த முதல் வீரர் என்ற பெருமையினையும் அவர் பெற்றார்.
- ஏற்றுமதி ஊக்குவிப்புத் திட்டங்களுக்காக சர்வதேச வர்த்தகத்தில் ரூபாய் சார்ந்த வணிக முறையினை அனுமதிக்கும் வகையில் இந்திய அரசு வெளிநாட்டு வர்த்தகக் கொள்கையில் மாற்றங்களைச் செய்துள்ளது.
- 2வது அடல் புதிய இந்தியா சவால் திட்டத்தின் (ANIC) இரண்டாம் கட்டத்தின் கீழ் அடல் புத்தாக்கத் திட்ட அமைப்பானது, பெண்களை மையமாக கொண்ட சவால் திட்டங்களை அறிமுகப் படுத்தியுள்ளது.

# தேசியச் செய்திகள்

## தகவல் தொழில்நுட்பச் சட்டத்தின் கீழ் தேசிய மக்கள்தொகை பதிவேட்டுத் தரவு தளங்கள் மற்றும் இணையதளங்கள்





- பத்தாண்டுகளுக்கு ஒருமுறை மேற்கொள்ளப்படும் மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் தேசிய மக்கள்தொகைப் பதிவேடு (NPR) தொடர்பான இணையதளங்கள் மற்றும் செயலிகள், 2008 ஆம் ஆண்டு தகவல் தொழில்நுட்பச் சட்டத்தின் கீழ் "பாதுகாக்கப் பட்ட அமைப்பு" அல்லது "முக்கியத் தகவல் உள்கட்டமைப்பு" என அறிவிக்கப் பட்டுள்ளன.
- மக்கள்தொகை கணக்கெடுப்பு விண்ணப்பங்கள், தேசிய மக்கள்தொகைப் பதிவேட்டின் தரவு தளம் அல்லது இந்தியத் தலைமைப் பதிவு அலுவலகத்தின் (RGI) தரவு மையங்கள் ஆகியவற்றுடன் தொடர்புடைய தரவுகளைச் சேதப்படுத்துதல் அல்லது அங்கீகரிக்கப்படாத வகையிலான அணுகல் ஆகியவற்றிற்குப் பத்து ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்படும் என்று இந்த அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.
- தகவல் தொழில்நுட்பச் சட்டத்தின் 70வது பிரிவானது, அதிகாரப்பூர்வ அரசிதழில்

வெளியிடப்படும் அறிவிப்பு மூலம், முக்கியமான தகவல் உள்கட்டமைப்பு மையத்தில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தாக்கத்தினை ஏற்படுத்தும் எந்தவொரு கணினி வளத்தையும் பாதுகாக்கப்பட்ட அமைப்பாக அரசாங்கம் அறிவிக்கலாம் என்று கூறுகிறது.

# சர்வதேசச் செய்திகள்

## வட்டியில்லா வங்கி முறை




- பாகிஸ்தான் அரசானது, இஸ்லாமியச் சட்டத்தின் கீழ் 2027 ஆம் ஆண்டு முதல் அந்நாட்டில் வட்டியில்லா வங்கி முறையை அமல்படுத்தத் திட்டமிட்டுள்ளது.
- வட்டியில்லா வங்கி முறை என்ற ஒரு கருத்தாக்கமானது, இஸ்லாமிய வடிவ வங்கி முறையிலிருந்துப் பெறப்பட்டது.
- இது ஒரு நெறிமுறை சார்ந்தத் தரநிலைகளின் அடிப்படையில் செயல்படுவதோடு முஸ்லிம்கள் எந்த விதமான வட்டியையும் செலுத்துவதையோ அல்லது பெறச் செய்வதையோ தடுக்கிறது.
- இஸ்லாமியத்தின் பொருளாதார நோக்கங்களை அடைவதற்கான பயனுள்ளச் செயற் கருவியாக இது கருதப்படுகிறது.
- பாகிஸ்தானில் தற்போதுள்ள வட்டி அடிப்படையிலான வங்கி முறையை ஒழிப்பதற்கான முதல் மனு 1990 ஆம் ஆண்டில் தாக்கல் செய்யப்பட்டது.
- கூட்டாட்சி ஷரியத் நீதிமன்றம் ஆனது 2000 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் தேதிக்குள் இந்த முறையை அமல்படுத்துமாறு அரசாங்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டது.
- பல முறையீடுகளுக்குப் பிறகு, 2027 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதிக்குள் நாட்டின் வங்கி அமைப்பில் இருந்து ரிபா (இஸ்லாமியச் சொல்) எனப்படும் வரியினை அகற்ற வேண்டும் என்று அந்நீதிமன்றம் அரசாங்கத்திற்கு உத்தரவு விடுத்தது.


- பாகிஸ்தானின் முதல் முழுமையான இஸ்லாமிய வங்கியான மீசா பாங்க் 2000 ஆம் ஆண்டின் முற்பகுதியில் நிறுவப்பட்டது.

### ஆப்பிரிக்க கார்பன் சந்தை முன்னெடுப்பு

- ஆப்பிரிக்க மேம்பாட்டு வங்கியானது (AfDB) ஆப்பிரிக்க கார்பன் ஆதரவுத் திட்டம் எனப்படும் இரண்டு ஆண்டுகள் அளவிலான ஒரு தொழில்நுட்ப உதவித் திட்டத்தை அறிமுகப் படுத்தியுள்ளது.
- இது அந்நாட்டின் எரிசக்தி, சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை மாற்றத் துறையால் செயல்படுத்தப் படுகிறது.
- இந்தத் திட்டமானது வங்கியால் பெறப்பட்ட முதலீட்டுத் திட்டங்களின் கார்பன் நிதித் திறனைக் கண்டறிந்து மதிப்பிடும் ஒரு மதிப்பாய்வு செயல்முறையை உள்ளடக்கியது.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

### CE20 கிரையோஜெனிக் எந்திரம்




- இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) ஆனது CE20 கிரையோஜெனிக் எந்திரத்தின் வெப்ப சோதனையை வெற்றிகரமாக நடத்தியது.
- இது GSLV-Mk3 என முன்னர் அழைக்கப்பட்ட LVM3 ஏவுகலத்திற்காக உள்நாட்டிலேயே உருவாக்கப் பட்டது.
- CE20 கிரையோஜெனிக் இயந்திரம் ஆனது LVM3 ஏவுகலத்திற்காக உள்நாட்டிலேயே உருவாக்கப் பட்டுள்ளது.

- இது கூடுதல் உந்துசக்தி ஏற்றுதலுடன் LVM3 கலத்தின் விண்பொருள் ஏற்றுத் திறனை 450 கிலோ வரை ஏற்றிச் செல்லும் வகையில் மேம்படுத்தும்.
- LVM3 என்பது இஸ்ரோவின் அதிக எடையுள்ள ஏவுகல வாகனமாகும்.

# மாநிலச் செய்திகள்

## 2023-24 ஆம் ஆண்டில் கேலோ இந்தியா தேசிய பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டிகள்




- உத்தரப் பிரதேச அரசானது, 2023-24 ஆம் ஆண்டில் கேலோ இந்தியா தேசிய பல்கலைக் கழக விளையாட்டுப் போட்டிகளை அம்மாநிலத்தின் நான்கு நகரங்களில் நடத்த உள்ளது.
- இந்த நகரங்கள் லக்னோ, கோரக்பூர், வாரணாசி மற்றும் நொய்டா ஆகியனவாகும்.
- ஒடிசா மற்றும் கர்நாடகா ஆகியவற்றிற்கு அடுத்தபடியாக உத்தரப் பிரதேச மாநிலம் என்பது தேசியப் பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டிகளை நடத்துதற்கான ஒரு வாய்ப்பை முதல் முறையாகப் பெற்றுள்ளது.

## இந்தியா ஸ்டோன்மார்ட் சர்வதேச கண்காட்சி




- 11வது இந்தியா ஸ்டோன்மார்ட் கண்காட்சியானது, ராஜஸ்தானின் ஜெய்ப்பூர் நகரில் நடைபெற்றது.
- இது கல் தொழில் துறையின் மதிப்புமிக்க கண்காட்சியாகும்.
- கல் தொழில்துறை மேம்பாட்டு மையமானது, இந்திய வர்த்தக மற்றும் தொழில்துறை

சங்கங்களின் கூட்டமைப்பினை ஒரு இணை அமைப்பாளராகக் கொண்டு இந்தக் கண்காட்சியை ஏற்பாடு செய்தது.

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## இந்திய வேளாண் வணிக விருதுகள் 2022




- 2022 ஆம் ஆண்டு இந்திய சர்வதேச வேளாண் வர்த்தக மற்றும் தொழில்நுட்பக் கண்காட்சியானது, மீன்பிடித் துறைக்கு வழங்கப்பட்ட சேவைகள் மற்றும் ஆதரவைப் போற்றும் வகையில் நடத்தப்பட்டது.
- தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்திற்குச் சிறந்த வேளாண் வணிகத்திற்கான "இந்திய வேளாண் வணிக விருதுகள் 2022" வழங்கப்பட்டது.
- ஹரியானா மாநிலத்திற்கு 'சிறந்த மாநிலம்' என்ற பிரிவில் 2022 ஆம் ஆண்டிற்கான இந்திய வேளாண் வணிக விருதானது வழங்கப்பட்டுள்ளது.

## வாலோங் போரின் வைர விழா




- இந்திய இராணுவமானது, வாலோங் போரின் வைர விழாவைக் கொண்டாடுகிறது.
- இது, அருணாச்சலப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட வாலோங் போரின் வைர விழா

கொண்டாட்டங்களின் தொடர்ச்சியாக ஒரு கண்காட்சியினையும் ஏற்பாடு செய்து உள்ளது.

- 1962 ஆம் ஆண்டில் இந்தியப் பகுதியை சீன ஆக்கிரமிப்பிலிருந்துப் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப் பட்ட போரில் இந்திய இராணுவ வீரர்கள் ஆற்றிய துணிச்சல் மற்றும் தியாகங்களை இந்த விழா போற்றுகிறது.

# விளையாட்டுச் செய்திகள்

## உலக மகளிர் குத்துச் சண்டை சாம்பியன்ஷிப் போட்டி 2023

- 2023 ஆம் ஆண்டு உலக மகளிர் குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் போட்டியினை இந்தியா நடத்த உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- உள்கட்டமைப்பு மற்றும் திறன்களை கட்டமைப்பதில் நாட்டின் திறனை வெளிப் படுத்தச் செய்யும் வகையில் கடந்த ஏழு ஆண்டுகளில் மூன்று பெரிய சாம்பியன்ஷிப் போட்டிகளை இந்தியா நடத்தியுள்ளது.
- இது இந்தியாவினால் நடத்தப்படும் மூன்றாவது உலக மகளிர் குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் போட்டி மற்றும் ஆறு ஆண்டுகளுக்குள் நடத்தப்படும் இரண்டாவது போட்டியாகும்.




# முக்கிய தினங்கள்


## உலகப் பயன்பாட்டுத் தினம் - நவம்பர் 10

- ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் மாதத்தின் இரண்டாவது வியாழன் அன்று உலகப் பயன்பாட்டுத் தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- உலகை வாழ்வதற்குச் சிறந்த இடமாக மாற்றுவதற்கு ஒன்றிணைந்து செயல்படக் கூடிய பல்வேறு சமூகங்களை ஒன்றிணைப்பதே இத்தினத்தின் நோக்கமாகும்.

- சிறந்த தரமானப் பொருட்களைக் கோருதல் என்ற ஒவ்வொருப் பயனரின் பொறுப்பு உணர்வின் மீதும் இந்தத் தினம் கவனம் செலுத்துகிறது.
- 2022 ஆம் ஆண்டின் உலகப் பயன்பாட்டுத் தினத்தின் கருத்துரு, "நமது சுகாதாரம்" என்பதாகும்.





## தேசிய கல்வி தினம் - நவம்பர் 11




- இந்தியாவின் முதல் கல்வி அமைச்சர் மௌலானா அபுல் கலாம் ஆசாத் அவர்களின் பிறந்த நாளைக் குறிக்கும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் 11 ஆம் தேதியன்று இந்தத் தினமானது கொண்டாடப்படுகிறது.
- 2022 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, 'பாடத் திட்டத்தினை மாற்றுதல், கல்வியை மாற்றுதல்' என்பதாகும்.
- அவர் ஒரு அறிஞர், கல்வியாளர் மற்றும் சுதந்திரப் போராட்ட வீரர் ஆவார் என்பதோடு, அவர் சுதந்திர இந்தியாவின் கல்வி முறையின் மேம்பாட்டில் ஒரு முக்கியப் பங்கையும் வகித்தவர் ஆவார்.
- இவருக்கு 1992 ஆம் ஆண்டில் இந்தியாவின் மிக உயரிய விருதான பாரத ரத்னா விருது அவரது மரணத்திற்குப் பின் வழங்கப்பட்டது.

- இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்கள், இந்திய அறிவியல் கல்வி நிறுவனங்கள் மற்றும் கட்டிடக்கலை மற்றும் கட்டிட வரைபடமாக்கல் கல்லூரி ஆகியவற்றை நிறுவுவதில் இவரது கருத்தாக்கமே காரணக் கர்த்தாவாகும்.
- தேசிய கல்வி தின கொண்டாட்டம் ஆனது முதல் முறையாக 2008 ஆம் ஆண்டு நவம்பர் 11 ஆம் தேதியன்று அப்போதைய குடியரசுத் தலைவர் பிரதீபா பாட்டீல் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

## பொதுச் சேவை ஒலிபரப்புத் தினம் - நவம்பர் 12




- 1947 ஆம் ஆண்டு டெல்லியில் உள்ள அகில இந்திய வானொலியின் அரங்கத்திற்கு M.K. காந்தி அவர்கள் மேற்கொண்ட முதல் மற்றும் ஒரே வருகையின் நினைவாக இந்த தினமானது கொண்டாடப்படுகிறது.
- 1947 ஆம் ஆண்டு நவம்பர் 12 ஆம் தேதியன்று, பிரிவினைக்குப் பிறகு ஹரியானாவில் உள்ள குருசேத்திரத்தில் தற்காலிகமாக குடியேறிய இடம்பெயர்ந்த மக்களிடம் (பாகிஸ்தானிலிருந்து அகதிகளாக வந்த மக்கள்) காந்தி அவர்கள் உரையாற்றினார்.
- இந்த தினமானது 2000 ஆம் ஆண்டில் பொதுச் சேவை ஒலிபரப்புத் தினம் அல்லது ஜன பிரசாரன் திவாஸ் என அறிவிக்கப்பட்டது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★